<u>தலைவர் சிறுசேரி ஊராட்சி அவர்களின் நடவடிக்கைகள்</u>
<u>முன்னிலை - திரு.சி.தேவராஜ்</u>

ந.க.எண். 19 /2022/சி.ஊ                                                                                  நாள்.27.12.2022

பொருள் : திருத்திய பலமாடி குடியிருப்பு கட்டிடம் - திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம் - சிறுசேரி ஊராட்சி மற்றும் கிராமம், - சர்வே எண்கள் 116/ 1,2,4,5A,5B,8,9: 117/1A1, 1A2,2A,3A,3B,120,121/1A, 1B,2,3A,3B,139/4B pt: 140/1pt, 141/1, 141/2A, 2B: 142, 143/2, 3pt: 144/2B: 145/2B, 146/1 மற்றும் 146/2 ல் ஏற்கனவே திட்ட அனுமதி வழங்கப்பட்ட மனையிடத்தில் சர்வே எண் 119/ 2B சேர்த்து திருத்திய 10.32 ஏக்கர் (Super imposed area – 40577.54 sq.m) மனைப்பரப்பில் 195819.27 ச.மீ. பரப்புடன் Combined Basement + Stilit + 19 Floors for Blocks A,B,C,D,E,F and G, Stilt +17 Floors for Block H, Ground + 3 Floor for Block I (Incidental Block-1) Ground Floor + 3 Floor for Block J (Incidental Block-2) with 2880 Dwelling units ல் அமையும் திருத்திய பலமாடி குடியிருப்பு கட்டுமானத்திற்கு தொழில்நுட்ப இசைவு அளிக்கப்பட்டு- திட்ட அனுமதி வழங்கி உத்தரவிடுதல்

பார்வை : 1.இணை இயக்குநர்/உறுப்பினர் செயலர்(பொ), மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், செங்கல்பட்டு அவர்களின் ந.க.எண்.4039/2021/ மாஉதிகு(செ.மா5) நாள் . 30.11.2022

2. **M/s Alliance budget housing India Pvt Ltd, M/s Alliance Infrastructure Projects Pvt Ltd** என்ற நிறுவனத்தின் கடித நாள். .12.2022

3,சிறுசேரி ஊராட்சி மன்றத்தீர்மான எண் 73 , நாள். 12.12.2022

4.வங்கி வரைவோலை எண்.716073

5.பல்வகை வரவு ரசீது எண் 404 , நாள். 30.05.2019

<u>உத்திரவு-</u>

-------------

பார்வை 1 யில் காணும் இணை இயக்குநர்/உறுப்பினர் செயலர்(பொ), மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், செங்கல்பட்டு அவர்களின் நடவடிக்கையின்படி, திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம், சிறுசேரி ஊராட்சி மற்றும் கிராமம் **M/s Alliance budget housing India Pvt Ltd, M/s Alliance Infrastructure Projects Pvt Ltd,** என்ற நிறுவனத்தின் சர்வே எண்கள் 116/ 1,2,4,5A,5B,8,9: 117/1A1, 1A2,2A,3A,3B,120,121/1A, 1B,2,3A,3B,139/4B pt: 140/1pt, 141/1, 141/2A, 2B: 142, 143/2, 3pt: 144/2B: 145/2B, 146/1 மற்றும் 146/2 ல் ஏற்கனவே திட்ட அனுமதி வழங்கப்பட்ட மனையிடத்தில் சர்வே எண் 119/2B சேர்த்து திருத்திய 10.32 ஏக்கர் (Super imposed area – 40577.54 sq.m) மனைப்பரப்பில் 195819.27 ச.மீ. பரப்புடன் Combined Basement + Stilit + 19 Floors for Blocks A,B,C,D,E,F and G, Stilt +17 Floors for Block H, Ground + 3 Floor for Block I (Incidental Block-1) Ground Floor + 3 Floor for Block J (Incidental Block-2) with 2880 Dwelling units ல் அமையும் திருத்திய பலமாடி குடியிருப்பு கட்டுமானத்திற்கு திட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**<u>Area Statement</u>**:
Site Extent –10.32Acres
(Super imposed area – 40577.54 sq.m)

| Block | Floors | FSI Area(Sq.m) | Non FSI Area(Sq.m) | Total Floors | Total Units |
|---|---|---|---|---|---|
| Basement | | | 25501.73 | 25501.73 | |
| Block A | 19 | 24626.05 | 90.14 | 24716.19 | 323 |
| Block B | 19 | 29818.98 | 115.44 | 29934.42 | 380 |
| Block C | 19 | 29818.98 | 115.44 | 29934.42 | 380 |
| Block D | 19 | 29818.98 | 115.44 | 29934.42 | 380 |
| Block E | 19 | 29818.98 | 115.44 | 29934.42 | 380 |
| Block F | 19 | 17244.76 | 84.58 | 17329.34 | 228 |
| BlockG(EWS Block) | 19 | 13190.04 | 91.33 | 13281.37 | 418 |
| BlockH(EWS Block) | 17 | 17091.25 | 96.81 | 17188.06 | 391 |
| Block I (Incidental Block-1) | 4 | 3398.64 | - | 3398.64 | - |
| Block J (Incidental Block-2) | 4 | 992.61 | 10.07 | 1002.68 | - |
| Total | | 195819.27 | 834.69 | 196653.96 | 2880 |

**Total FSI Area: 195819.27 Sq.m**

மேலும் திருத்திய பலமாடி குடியிருப்பு கட்டுமான வரைபடத்திற்கு ஒப்புதல் அளிக்கபட்ட க.வ../மாஉதிகு (செ.மா.) எண் 79/2022 என எண்ணிட்டு இசைவு அளிக்கப்பட்டதினை தொடர்ந்து, நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகளுடன் நகர் ஊரமைப்பு சட்டம் 1971, பிரிவு 49ன் கீழ் திட்டஅனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்த திட்ட அனுமதியானது நகர் ஊரமைப்பு சட்டம் 1971,பிரிவு 50ன் படி திட்ட அனுமதி வழங்கப்பட்ட நாளிலிருந்து 01.12..2022 முதல் 30.11.2030 தேதி வரை எட்டு ஆண்டுகளுக்கு மட்டுமே செல்லத்தக்கதாகும்.

மேலும் அனுமதிகட்டணம் ரூ.84,33,975/- (எண்பத்து நான்கு இலட்சத்து முப்பத்து மூன்றாயிரத்து தொள்ளாயிரத்து எழுபத்து ஐந்து மட்டும்) வங்கிவரைவாக சிறுசேரி ஊராட்சியில் ஏற்கனவே செலுத்தப்பட்டுள்ளது மற்றும் கட்டிட தொழிலாளர் நிதி ரூ.2,53,01,936/- யூனியன் பாங்க் ஆஃப் இந்தியா வங்கியில் சம்மந்தப்பட்ட கணக்குஎண். 530601010038239-ல் RTGS மூலமாக ஏற்கனவே செலுத்தப்பட்டுள்ளதின் அடிப்படையில் கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு திட்டஅனுமதி வழங்கி உத்தரவிடப்படுகிறது.

<u>நிபந்தனைகள்</u>

1. பார்வை 1 யில் காணும் இணை இயக்குநர்/உறுப்பினர் செயலர்(பொ), மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், செங்கல்பட்டு அவர்களின் உத்தரவில் கொடுக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் அனைத்தும் பின்பற்றவேண்டும்.

2. கட்டிடத்தின் முன் பக்கத்தில் 1.5 மீட்டருக்கு குறையாமலும் பின் பகுதியில் 1.5 மீட்டருக்கு குறையாமலும் இரு பக்கங்களிலும் 2 மீட்டருக்கு குறையாமலும் இடைவெளி விடப்பட்டிருக்கவேண்டும்.

3. தமிழ்நாடு ஊராட்சியின் 1994ம் ஆண்டுசட்டத்தின்படி சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமவிதிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள எல்லாக் கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டிருத்தல் வேண்டும்.

4. அரசாங்கத்திற்கு சொந்தமான இடங்களிலோ அல்லது இம்மனுதாரருக்கு சம்மந்தமில்லாத வேறு இடங்களிலோ ஆக்கிரமணம் செய்வது கூடாது.

5. கட்டிடவேலைகள் நடக்கும் பொழுதோ அல்லது வேறு எந்த நேரங்களிலோ ஊராட்சியிலிருந்து ஆய்வு செய்ய வரும் அதிகாரிகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களை காண்பிக்க வசதியாக வேலை நடக்குமிடங்களில் மேற்படி வரைபடங்களை வைத்திருத்தல் வேண்டும்.

6. இந்த உத்தரவால் அனுமதிக்கப்பட்ட காலவரையரைக்குள் கட்டிடம் கட்டிமுடிக்கப்படாவிடில் அனுமதியை மீண்டும் புதியதாக மனுகொடுத்து அனுமதி பெறவேண்டும்.

7. அனுமதிக்கு வரைபடத்தில் கூடுதலோ அல்லது மாறுதல் ஏதேனும் செய்து கட்ட வேண்டுமானால் அதற்குரிய திருத்தப்பட்ட வரைபடங்களுடன் தலைவர் நிர்வாக அதிகாரிக்கு விண்ணப்பம் செய்து உத்தரவு பெற்றபிறகு தான் மாறுதல் கட்டிடம் கட்டவேண்டும்.

8. கட்டிடம் கட்ட உத்தரவு பொய்ப்பதிவுகள் மூலம் பெற்றதாகவோ அல்லது ஏதேனும் கட்டிட விதிகளுக்கு புறம்பாகவோ பெற்றதாயிருந்தால் மேற்படி உத்தரவினை ரத்து செய்ய தலைவருக்கு உரிமை உண்டு.

9. புதியதாக கட்டப்படும் கட்டிட இடங்கள் எந்தநேரத்திலும் சுத்தமான பொது சுகாதாரக்கேடு விளைவிக்காத வகையில் வைத்து இருத்தல் வேண்டும்.

10. மனுதாரர் கட்டிடத்தை கட்டிமுடித்த பின்பு இவ்வலுவலகத்திலிருந்து சான்றிதழ் பெற்றபின்பே குடிபுக வேண்டும்.

11. கட்டிடத்திலிருந்து வரும் கழிவுநீரை மனுதாரர் தன் சொந்த இடத்திற்குள்ளேயே நிறுத்தி வைத்து அவைகளை அப்புறப்படுத்தும் வகையில் வடிகால்வாய்களும் கழிவு நீர்த்தொட்டிகளும் அமைத்துக் கொள்ளவேண்டும்.

12. கட்டிடம் தொழிலகங்களுக்காகவோ அல்லது வேறுதொழிலாளர்கள் வேலைசெய்யவேண்டிய இடங்களுக்காகவோ கட்டப்படாமலிருந்தால் அவைகளுக்கு மாவட்ட சுகாதார அலுவலரிடமிருந்தும், தொழிலகங்களின் ஆய்வாளரிடமிருந்தும் மற்றும் உறுப்பினர் செயலாளர், சென்னை பெருநகர் வளர்ச்சிகுழுமம் ஆகியோரிடமிருந்தும் அனுமதிபெற்றிருத்தல் வேண்டும்.

13. அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களின் படியே கட்டிடம் கட்டி முடிக்கப்பட்ட பின்பு இவ்வூராட்சியிலிருந்து சான்றிதழ் பெற்றுக்கொள்ளவேண்டும்.

14. மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பை முறையாக பராமரிக்கப்பட வேண்டும்.

15. கட்டிடவேலைமுடிந்தபின்போ அல்லது குடியேறியபின்னரோ 15 தினங்களுக்குள் தலைவர் அவர்களுக்கு எழுத்து மூலமாக தெரிவிக்கவேண்டும்.

தலைவர்
சிறுசேரி ஊராட்சி
திருப்போரூர் ஊராட்சிஒன்றியம்

பெறுநர்

**M/s Alliance budget housing India Pvt Ltd,**
**M/s Alliance Infrastructure Projects Pvt Ltd, Chennai 600085 .**